**அக்கரைப்பற்று பிரதேச சபை**
**அம்பாரை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2018 ம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 மே 02 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை மற்றும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி பிரதேச சபை தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து அக்கரைப்பற்று பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் நிதிநிலைமையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலையை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (i). | மீளாய்வாண்டிற்கான கணக்காய்வுக் கட்டணத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஒதுக்கீடு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | எதிர்வரும் காலங்களில் ஒதுக்கீடு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii). | மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்திக் கொடை வேலைத்திட்டத்தின் கீழ் குடிநீர் விநியோக குழாய் விரிவாக்க வேலைகளுக்கு உத்தேச மதிப்பீட்டின்படி தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபைக்கு முற்பணமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 999,774 தொகை மீளாய்வாண்டின் இறுதிவரை குறித்த வேலைத்திட்டம் முடிவுறாதிருந்ததும், நிதிக்கூற்றில் முற்பணமாக காட்டப்படாமல் செலவீனமாக காட்டப்பட்டுள்ளது. | மதிப்பீட்டிற்கமைய முற்பணமாக செலுத்தப்பட்ட தொகையானது வேலை முடிவுற்று தீர்ப்பனவு செய்யும் வரை முற்பணமாக காட்டப்படல் வேண்டும். | நிதிக்கூற்று தயாரிக்கும் போது முடிக்கப்பட்ட வேலைத்திட்டங்கள் அனைத்தும் நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் வழங்கப்பட்ட மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட தொகைக்கமைவாகவே செய்து முடிக்கப்பட்டதனால் அதனைக் கருத்திற் கொண்டு குறித்த தொகையானது செலவாகக் காட்டப்பட்டுள்ளது. |

## 1.4 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதிகள் | | | |
| (i) பிரிவு 5(12) | பணம், களஞ்சியப் பொருட்கள் மற்றும் காசோலைகளில் கையொப்பமிடல் மூன்று உத்தியோகத்தர்களுக்கு நிர்வாக ரீதியாக ஒப்படைக்கப் பட்டிருந்த போதிலும், அவர்களிடமிருந்து பாதுகாப்புப் பிணை பெறப்பட்டிருக்கவில்லை. | விதிகள், சுற்றறிக்கைகள் பின்பற்றப்படல் வேண்டும். | எதிர்காலத்தில் அத்தகைய பாதுகாப்புப் பிணை தொடர்பான தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும். |
| (ii) பிரிவு 193 | மீளாய்வாண்டிற்கான உள்ளபடியான வருமானம் மற்றும் செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவுத் திட்டத்துடன் ஒப்பிடப்பட்டு முரண்பாட்டுக்கான விளக்கங்களை உள்ளடக்கிய கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | விதிகள், சுற்றறிக்கைகள் பின்பற்றப்படல் வேண்டும். | எதிர்வரும் கணக்காய்வின்போது இவ்விடயங்களடங்கிய கூற்று தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படும். |
| (ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 396 | ஆறு மாதங்களிற்கு மேற்பட்ட ரூபா 27,000 பெறுமதியான காசொலை தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் பின்பற்றப்படல் வேண்டும். | தற்போது அக்காசோலைகளை மாற்றுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,388,857 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 507,734 தொகையாக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவைகள் | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவைகள் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | - | - | - | - | 10,000 | - | - | - |
| வாடகைகள் | 1,800,000 | 2,652,811 | 2,634,511 | 18,300 | 1,800,000 | 1,472,413 | 1,472,413 | - |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 335,000 | 348,900 | 348,900 | - | 274,000 | 374,000 | 374,000 | - |
| ஏனைய வருமானம் | 3,851,750 | 4,052,203 | 2,473,469 | 2,588,635 | 3,365,000 | 2,032,549 | 1,601,956 | 1,010,326 |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 ஆம் திகதி வரை சபையினால் அறவிடப்படவேண்டிய வருமானம் ரூபா 8,064,240 தொகையில் மீளாய்வாண்டில் ரூபா 5,456,880 தொகை அறவிடப்பட்டிருந்தது. இதன்படி வருமான சேகரிப்பு வீதமானது 68மூ ஆக காணப்பட்டிருந்தது. | கடந்த வருட நிலுவைகளுடன் மீளாய்வாண்டுக்கான வருமானத்தினையும் அறவிட நடவடிக்கை எடுத்தல் | வருமான நிலுவைகள் தற்போது அறவிடப்பட்டுள்ளதுடன் இதில் நீதிமன்ற தண்டப்பணத்தில் ஒருபகுதி மாத்திரம் அறவிடப்படவேண்டியுள்ளது. அதனைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

### 2.2.3 திண்மக்கழிவு சேவைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பகுதியிலுள்ள வீடுகள், கடைகள் மற்றும் தனியார் நிறுவனங்களிடமிருந்து சேகரிக்கும் திண்மக் கழிவுகளுக்கான சேவைக் கட்டணங்கள் கணிப்பீடு செய்யப்பட்டு அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திண்மக் கழிவுகளுக்கான சேவைக் கட்டணங்கள் கணிப்பீடு செய்யப்பட்டு அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | கட்டணம் அறவிடப்படுவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

### 2.2.4 முத்திரைக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட அசைவற்ற ஆதனங்களை மாற்றுகையில் கிழக்கு மாகாண இறைவரித் திணைக்களத்தினால் 2017 மற்றும் 2018 ஆண்டுகளில் நேரடியாகவும் நடமாடும் சேவைகள் மூலமாகவும் அறவிட்ட மேலதிக முத்திரை தீர்வையினை கணக்கிடப்பட்டு அறவிடப்பட்டிருக்கவில்லை. | விடுபட்ட நிலுவை தொகைக்கான முத்திரை தீர்வை ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு அறவிட நடவடிக்கை எடுத்தல். | குறித்த விடயம் தொடர்பில் பதிவாளர் திணைக்களத்துடன் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதற்கான அறவீடுகளினைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

### (அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், பிரதேச சபையின் வருமானம் மற்றும் ஒழுங்கமைப்புக்காக முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படத்தப்பட்டிருக்க வேண்டிய போதிலும், 2018 திசெம்பர் 31 வரை 5 விடயங்கள் தொடர்பில் தயாரிக்கப்பட்ட உபவிதிகளிற்கான அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. | உபவிதிகள் தயாரிக்கப்பட்டு அனுமதியினைப் பெற்று நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உணவகங்கள், சிகையலங்கார நிலையங்கள், விளம்பரங்கள், வெதுப்பகங்கள் மற்றும் அபாயகரமான வியாபாரங்கள் ஆகியவற்றிற்கான உபவிதிகள் புதிதாக தயாரிக்கப்பட்டு சபையின் அங்கீகாரத்துடன் அனுமதிக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய வருமான ஒழுங்கமைப்புக்களுக்கான விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

## (ஆ) செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தயாரிக்கப்பட்ட 05 உப விதிகளின் பிரகாரம் சபையினால் செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய முக்கிய விடயங்கள் தொடர்பில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | உபவிதிகளுக்கேற்ப செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய செயல்பாடுகள் தொடர்பிலான வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | தயாரிக்கப்பட்ட 05 உபவிதிகளின் பிரகாரம் செயல்படுத்தப்படவேண்டிய வருடாந்த செயற்பாட்டுத்திட்டம் தற்போது தயாரிக்கப்படுகின்றது. |

## (இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு அபிவிருத்திச் சட்டத்தின்படி 2030 ஆம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலுடன் இணங்குமாறு ஒவ்வொரு பொது நிறுவனமும் செயற்பட வேண்டும். இருப்பினும் இது தொடர்பிலான இலக்குகளை அடையாளம் கண்டு அதனை அடைவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இலக்குகள் அடையாளங்கண்டு அதனை அளவிடுவதற்கான குறிகாட்டிகளை உருவாக்குவதுடன் அதனை அடைவதற்கு நடவடிக்கை எடுத்தல். | இவ்விடயம் தொடர்பிலான நிறுவன இலக்குகள் அடையாளம் காணப்பட்டு செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் அலுவலகம், நூலகங்கள், பொதுச்சந்தை மற்றும் பொது விளையாட்டு மைதானம் என்பவை அமைந்துள்ள சபைக்குச் சொந்தமான 505 பேர்ச் அளவுடைய 07 காணிகளுக்கான உரிமைப் பத்திரங்கள் சபையினால் பெறப்பட்டிருக்கவில்லை. | உரிமைப் பத்திரங்களைப் பெற நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | காணிகளுக்கான உரித்தாவணங்கள் விரைவில் பெற்றுக்கொள்ளப்படும். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையில் 06 வகையான பதவிகளிற்கு 06 ஆளணி வெற்றிடங்கள் காணப்பட்டிருந்தன. | வெற்றிடங்களை நிரப்ப தொடர் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | சபையில் காணப்படும் பதவி வெற்றிடங்கள் தொடர்பில் அதனை நிவர்த்தி செய்யும்பொருட்டு முதலமைச்சின் செயலாளருக்கு கோரிக்கைக்கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. |

### 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) 1987அம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 134ஆம் பிரிவுக்கமைய, பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசங்களிலுள்ள 87 வர்த்தக நிலையங்கள் மற்றும் 1,908 வீடுகள் மீது 2011ஆம் ஆண்டு தொடக்கம் வீதவரிகள் கணிப்பீடு செய்யப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட அபிவிருத்தி யடைந்த பிரதேசங்களை இனங்கண்டு அப்பிரதேசங்களில் சோலைவரி அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுவதன் மூலம் சபையின் வருமானத்தை அதிகரிக்கலாம். | எதிர்வரும் காலங்களில் இவ்வரியினை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (ஆ)மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்திக் கொடை வேலைத்திட்டத்தின் கீழ் அக்கரைப்பற்று பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட 05 வீதிகளுக்கு 605.5 m தூரத்திற்கு குடிநீர் விநியோக குழாய் விரிவாக்க வேலைகளுக்கு ரூபா 999,774 உத்தேச மதிப்பீட்டிற்கமைய தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபைக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தும் 150m நீளமான பள்ளிக்குடியிப்பு 02ஆம் பிரிவின் கரையோர வீதிக்கு 2019 மே 31 ஆந்திகதி வரைக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த வேலையினை விரைவாக நிறைவேற்ற நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எதிர்வரும் மாதங்களில் விவசாய நடவடிக்கைகள் நிறைவடைய இருப்பதனால் இவ்வேலையானது உடன் பூரணப்படுத்தப்பட்டு செயற்றிட்டம் நிறைவுசெய்யப்படும் என்பதனை தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை அறிவிப்புச் செய்துள்ளது என்பதனை அறியத்தருகின்றேன். |

### 3.5 வாகனங்களின் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு மொத்தமாக 03 வாகனங்களின் உரிமைகள் சபைக்கு மாற்றம் செய்யப்பட்டிருக்கவில்லை. | ஊரிமையினை மாற்ற நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பிரதேச சபையின் பெயருக்கு பெயர் மாற்றம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

தீர்க்கப்படாத கணக்காய்வு அவதானிப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) 2015 ஆம் ஆண்டில் பிரதேச சபைகளை வலுவூட்டும் வேலைத்திட்டத்தின் கீழ் ஆலிம்நகரின் உள்ளக வீதிகளை | மேலதிக கொடுப்பனவை | பதில் சமர்ப்பிக்கப்படவில் |

| | | |
|---|---|---|
| புனரமைப்பதற்கான ஒப்பந்தம் சனசமூக நிலையத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில், சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் எழுத்து மூலமான உறுதிப்படுத்தலின்படி குறித்த வேலைக்கு சபையின் மோட்டார் கிரேடர் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் அம்மோட்டார் கிரேடர் முலம் மேற்கொள்ளப்பட்ட வேலைகளுக்கான கொடுப்பனவாகிய ரூபா 42,000 தொகையையும் சபை சனசமூக நிலையத்திற்கே செலுத்தியிருந்தது. | அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | லை. |
| (ஆ) சபையின் JCB இயந்திரம் மீளாய்வாண்டில் விபத்துக்குள்ளாகி ரூபா 115,128 செலவில் திருத்தம் செய்யப்பட்டிருந்தது. இச்செலவில் காப்புறுதி கூட்டுத்தாபனத்திடமிருந்து ரூபா 37,500 இழப்பீட்டுத் தொகை பெறப்பட்டிருந்தது. இருப்பினும், சபையினால் இவ்விபத்து தொடர்பில் அரச நிதிப்பிரமாணம் 103, 104(1) இன் பிரகாரம் பொலிஸ் முறைப்பாடு மற்றும் விசாரணை நடாத்தி நட்டத்தின் அளவையும் அந்நட்டத்திற்கு பொறுப்பானவர்களையும் நிர்ணயிப்பதற்கும் சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்திற்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட்டல் வேண்டும். | பதில் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (இ) நீர் இணைப்பினை பெற்றுக்கொள்வது தொடர்பாக அக்கரைப்பற்று, நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு 2016 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட கொடுப்பனவு மீது 11% பெறுமதிசேர் வரிக்குப் பதிலாக 15% பெறுமதிசேர் வரி செலுத்தப்பட்டுள்ளதால் ஒப்பந்தக்காரருக்கு ரூபா.34,749 தொகை மேலதிகமாகச் செலுத்தியுள்ளது. | மேலதிக கொடுப்பனவை அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பதில் சமர்ப்பிக்கப்படவில்லை. |